SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

# தமிழ்

மார்ச் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040
**Contact : 044-43533445 | 044-45543082.**
**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# மார்ச் - 2018

## தமிழ்நாடு

1) **உலகத் தமிழ் பாரம்பரிய மாநாடு (World Tamil Traditional Conference):** “தமிழ் மொழியும் தமிழர் வாழ்க்கை முறையும்” என்று தலைப்பிடப்பட்ட இம்மாநாடு ஈரோடு மாவட்டம் குமாரபாளையத்தில் 2018 மார்ச் 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் நடைபெற்றது.

2) **14417 உதவி மையம் (14417 Helpline)** : பள்ளி மாணவர்களுக்கு கல்வி ஆலோசனை வழங்குவதற்காக 24 x 7 மணி நேரமும் செயல்படும் இலவச உதவி எண்ணான 14417-ஐ தமிழக முதல்வர் 2018, மார்ச் 3-ம் நாள் தொடங்கி வைத்தார்.

3) **நியூட்ரினோ ஆய்வு மையம் :** இந்தியாவில் அமைக்கப்படும் நியூட்ரினோ ஆய்வு மையமானது மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் தடையில்லாச் சான்றிதழை 2018, மார்ச் 5 அன்று பெற்றது. இந்த நியூட்ரினோ ஆய்வு மையம் ஆனது தேனி மாவட்டத்தின் போடி மலைப்பகுதியில் (Bodi Hills) உள்ள பொட்டிபுரம் கிராமத்தில் நிறுவப்பட உள்ளது.ப

4) **அந்த்யோதயா (Antyodaya)** : தாம்பரம்-செங்கோட்டை இடையேயான முதலாவது அந்த்யோதயா சிறப்பு இரயில் 2018 மார்ச் 5-ம் நாள் தொடங்கி வைக்கப்பட்டது. இது பகல் பொழுதில் பயணம் செய்யும் வகையில் வாரம் இரு முறை இயக்கப்படுகிறது.

5) தமிழக சட்டப் பேரவையின் புதிய செயலாளராக **திரு.K.சீனிவாசன்** அவர்கள் 2018, மார்ச் 6-ம் நாள் நியமிக்கப்பட்டுள்ளார்.

6) **உலக சைவசித்தாந்த மாநாடு** : இம்மாநாட்டின் ஐந்தாவது பதிப்பு 2018 மார்ச் 8 அன்று சென்னையில் நடைபெற்றது.

7) தமிழகத்தின் ஆரணி, செய்யாறு, ஆற்காடு, வந்தவாசி, திருவண்ணாமலை, வேலூர் மற்றும் போர்னாம்பட்டு ஆகிய 7 பகுதிகளில் 2018 மார்ச் 12 முதல் தூர்தர்ஷன் (Doordharshan) நிறுவனம் தனது சேவையை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

8) **S128 :** இந்தியாவின் மிகப்பெரிய காற்று ஆற்றல் மின்னாக்கிச் சுழலியான (Wind turbine Generator) S128-ஐ சுஸ்லான் இந்தியா குழுமம் (Suzlon Groups India) தயாரித்துள்ளது. இச்சுழலியில் உள்ள சுற்றகத்தின் (rotor) விட்டம் 128 மீட்டர்களாகும். இது 2018 மார்ச் 13 அன்று தமிழ்நாட்டின் **சங்கநேரியில்** நிறுவப்பட்டுள்ளது.

**Free State Level TNPSC Group II (OT) MOCK TEST on 4th November 2018 (Sunday)**
**Test Centres:** 1. Anna Nagar, 2. Adyar, 3. Salem, 4.Madurai, 5. Trichy, 6. Tirunelveli, 7. Cuddalore, 8. Vellore, 9. Thanjavur, 10. Kancheepuram, 11. Krishnagiri, 12. Erode, 13. Palani, 14. Coimbatore, 15. Namakkal

9) **அதுல்ய மிஸ்ரா குழு (Atulya Mishra Committee) :** தேனி மாவட்டத்தின் **குரங்கனியில்** நிகழ்ந்த காட்டுத்தீ விபத்தினைப் பற்றி ஆராய்வதற்காக அதுல்ய மிஸ்ரா தலைமையிலான குழுவினைத் தமிழக அரசு 2018 மார்ச் 14ம் நாள் நியமித்தது.

10) **உதான் (UDAN - Ude Desh Ka Aam Naagrik) திட்டம் :** இத்திட்டத்தின் கீழ், **சென்னையிலிருந்து சேலம்** வரையிலான விமானப் போக்குவரத்து சேவை ஏழு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் முதன் முறையாக மீண்டும் தொடங்கி வைக்கப்பட்டது. 2018 மார்ச் 25, அன்று Truejet நிறுவனம் மூலம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவையினுடைய போக்குவரத்துக் கட்டணம் 1499 ரூபாய் ஆகும்.

11) **முதலாவது பூச்சிகளுக்கான அருங்காட்சியகம் :** இந்தியாவின் முதலாவது பூச்சிகளுக்கான அருங்காட்சியகம் (First Insect Museum) **கோயம்புத்தூரில்** உள்ள 'தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக வளாகத்தில்' 2018 மார்ச் 28 அன்று அமைக்கப்பட்டது. இதன் கருத்துரு : **"பூச்சிகளே அரசர்கள்" (Bugs are Kings).**

12) சென்னையில் அமைந்திருந்த **இந்திய விலங்குகள் நல வாரியத்தின் (Animal Welfare Board of India)** தலைமையகமானது **ஹரியானாவின் ஃபரிதாபாத்** மாவட்டத்திலுள்ள **பல்லப்கார் (Ballabhgarh)** நகருக்கு மாற்றப்பட்டது.

13) **சென்னை சர்வதேச விமான நிலையம்,** ஆனது **தமிழ்நாடு சுற்றுலா விருதினை** (Tamilnadu Tourism Award) தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாகப் பெற்றது.

14) **அம்மா அலைபேசிச் செயலி (Amma Mobile App) :** பொதுமக்கள் நிலம் சார்ந்த ஆவணங்களை இணைய வழியில் (e-Service of land records) எளிதாக அணுகும் வகையில் வடிவமைக்கப்பட்ட 'அம்மா அலைபேசிச் செயலியினை' 2018 மார்ச் 2 அன்று தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.

15) **க்ரிஷி கர்மான் விருது (Krishi Karman Award 2015-16) :** உணவு தானியங்களை அதிக அளவில் விளைவித்ததற்காக வழங்கப்படும் இவ்விருதினை 2015-16ம் ஆண்டுக்காக தமிழ்நாடு பெற்றுள்ளது. இதற்கு முன்னர் தமிழ்நாடு இவ்விருதினை 2011-12, 2013-14, 2014-15 ஆகிய மூன்று ஆண்டுகள் பெற்றுள்ளது.

## தேசம்

1) மத்திய அரசு ஆனது 2018-ம் ஆண்டினை **'சிறுதானியங்களுக்கான தேசிய ஆண்டாக' (National Year of Millets)** அறிவித்துள்ளது.

2) சிப்கோ இயக்கத்தின் (Chipko Movement) **45வது ஆண்டு** விழாவினை நினைவு கூறும் வகையில் கூகுள் நிறுவனம் தனது வலைமுகப்பில் 2018 மார்ச் 25 அன்று டூடுள் (Doodle) வழங்கிச் சிறப்பித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

3) காஷ்மீரின் ஸ்ரீநகரில் **ஆசியாவிலேயே மிகப்பெரிய துலிப் மலர்த் தோட்டம்** (Tulip Garden) திறந்து வைக்கப்பட்டது.

4) **முதல் ஹெலிடாக்ஸி (1st Heli Taxi) :** இந்தியாவிலேயே முதன் முறையாக ஹெலிடாக்சி போக்குவரத்துச் சேவை கர்நாடகாவின் **பெங்களூர்** நகரில் தொடங்கப்பட்டுள்ளது. பெல் 407 (Bell 407) வகை ஹெலிகாப்டரே ஹெலி டாக்சி சேவையை அளிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

5) கர்நாடகாவின் பெல்காம் நகரிலுள்ள **பெலகாவியில் (Belagavi)** இந்தியாவிலேயே மிகவும் உயரமான தேசியக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது. இதன் உயரம் 110 மீட்டர் ஆகும்.

6) உத்திரப் பிரதேசத்திலுள்ள **ராபர்ட்ஸ் கஞ்ச் (RobertSganj) இரயில் நிலையம், சோன்பத்ரா இரயில் நிலையம் (Sonbhadra Railway Station)** என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

7) **இரண்டு அடுக்கு கிராம உள்ளாட்சி அமைப்பு : அருணாச்சல பிரதேச** மாநில சட்டமன்றம் இரண்டு அடுக்குகள் கொண்ட கிராம உள்ளாட்சி அமைப்பினை (two tier panchayat Raj) உருவாக்குவதற்கான சட்டத்திருத்த முன்வரைவினை (Amendment Bill) நிறைவேற்றியது. அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி - IX மற்றும் 243 முதல் 243-O வரையிலான விதிகளும் 73வது அரசியலமைப்புச் சட்டத் திருத்தமும் கிராம உள்ளாட்சி அமைப்புகள் பற்றியது ஆகும்.

8) ஆந்திரப்பிரதேசத்தின் குண்டூரில் உள்ள **பிராங்கிபுரம் இரயில் நிலையம் ஆனது** (Phirangipuram Railway Station) முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் (All - Women Railway Station) மூன்றாவது இரயில் நிலையம் என்னும் சிறப்பினைப் பெறுகிறது. **மும்பையின் மதுங்கா (Matunga)** இரயில் நிலையம் மற்றும் **ஜெய்ப்பூரின் காந்தி நகர் இரயில் நிலையம்** ஆகியவை முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படும் இந்தியாவின் முதல் இரண்டு இரயில் நிலையங்களாகும்.

9) **நாகமோகன் தாஸ் குழு** (Naga Mohan Das Committee) : கர்நாடகாவில் வாழும் **லிங்காயத் வகுப்பினருக்கு** (Lingayat) **தனி மதத்தினர் மற்றும் சிறுபான்மையினருக்கான** (Religion Status and Minority Status) அந்தஸ்து வழங்குவதற்கான பரிந்துரைகளை ஆராய்வதற்காக இக்குழு அமைக்கப்பட்டது. இதன் பரிந்துரைகளை அப்போதைய கர்நாடக முதல்வர் திரு.சித்தராமையா அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு லிங்காயத் வகுப்பினருக்கு தனி மத அந்தஸ்து வழங்கப்பட்டது.

10) **பரிவாரா மற்றும் தலவாரா (Parivara & Talawara)** என்ற **கர்நாடகாவில்** உள்ள இரண்டு பிரிவினரை அட்டவணைப் பழங்குடியினராக (ST) மத்திய அரசு அங்கீகரித்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

11) **பலாப்பழத்தினை,** தனது மாநிலக்கனியாக (Official State Fruit) **கேரள அரசு** அறிவித்துள்ளது.

12) **நெகிழிப் பூங்கா** (Plastic Park) : **ஜார்க்கண்ட்** மாநில அரசு **தியோகர் (Deogarh)** மாவட்டத்தில் நெகிழிப் பூங்காவினை அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

13) **டையூ யூனியன் பிரதேசம்** (Diu Union Territory) : முழுவதும் (100%) சூரிய ஆற்றலால் இயங்கும் முதல் யூனியன் பிரதேசம் என்னும் சிறப்பினைப் பெறுகிறது.

14) **முழுவதும் (100%) சூரிய ஆற்றலால் செயல்படும்** ஆரம்ப சுகாதார நிலையங்களைக் (Primary Health Centres) கொண்ட இந்தியாவின் முதல் மாவட்டமாக குஜராத் மாநிலத்தின் **சூரத் மாவட்டம்** உருவெடுத்துள்ளது.

15) கேரள மாநிலத்திலுள்ள கொல்லம் மாவட்டம் (Kollam) ஆனது அனைத்து வகையான உணவு வகைகளையும் உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்டத்தினுடைய (FSSA) கண்காணிப்பின் கீழ் கொண்டு வந்துள்ளது.

16) ஹரியானாவின் குருகிராம் (Gurugram) மாவட்டத்தில் **முதல் சைபர் காவல் நிலையம் (First Cyber Police Station)** அமைக்கப்பட்டுள்ளது.

17) **மகாராஷ்டிர மாநில** அரசு ஆனது பிளாஸ்டிக் உபயோகத்தை முழுவதுமாகத் தடை செய்துள்ளது.

18) **மகாராஷ்டிரா மாநிலத்தின் முதல் 'பெரும் உணவுப் பூங்கா' (Mega Food park), சதாரா (Satara)** மாவட்டத்திலுள்ள திகாவோன் (Degaon) கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

19) **பசுமைத் தொழில்நுட்ப பெரும் உணவுப் பூங்கா** (Green tech Mega Food Park) **: இது இராஜஸ்தானின் முதல் 'பெரும் உணவுப் பூங்கா'வாகும்; இது ஆஜ்மீர்** மாவட்டம் ரூபன்கார் (Roopangarh) கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

20) **ஆரோக்கிய கர்நாடகா** (Arogya Karnataka) **:** இது முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை மருத்துவ சிகிச்சையை உறுதி செய்யும் மாநில அரசின் சுகாதார நல்வாழ்வுத் திட்டமாகும். இத்திட்டமானது வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்களுக்கும் (BPL) வறுமைக் கோட்டுக்கு மேல் வாழும் மக்களுக்கும் (APL) பயன்படும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

21) இந்தியாவிலேயே முதன் முறையாக, **டிஜிட்டல் தானியங்கி வேகக் கண்காணிப்பு புகைப்படக் கருவிகளை** (Digital Automatic Speed Gun Cameras) டிஜிட்டல் பலகைகளில் பதிப்பிக்கும் **முதல் நகரமாக சண்டிகர் (Chandigarh)** உருவெடுத்துள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

22) **நைபுன்ய ரதம்** (Naipunya Ratham) **:** ‘நைபுன்ய ரதம்’ அல்லது சக்கரங்களின் மேல் உலகம் (World on Wheels) எனும் திட்டம், தொழில் நுட்பம் மற்றும் புத்தாக்கம் (Innovation) பற்றிய புரிதலை மாநிலத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சேர்ப்பதற்காக **ஆந்திரப் பிரதேச** அரசால் தொடங்கப்பட்டதாகும்.

23) **சக்தி ஸ்தலா** (Shakti Sthala) **:** உலகின் **மிகப்பெரிய சூரிய ஒளி மின் உற்பத்திப்** பூங்காவான (Solar Park) இது, **கர்நாடகாவின் தும்கூர் மாவட்டத்தில்** அமைக்கப்பட்டுள்ளது. 2,000 மெகாவாட்டுகள் மொத்தத்திறன் கொண்ட இத்திட்டத்தின் முதல் கட்டமானது 2018 மார்ச் 2 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

24) **சரக்குகளைக் கையாளும் கிராமம் (Freight Village) :** மத்திய அரசும் உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து ஆணையமும் (Inland waterways Authority of India) இணைந்து சரக்குகளைக் கையாளும் திறன் கொண்ட கிராமத்தினை (Freight Village) உத்திரப் பிரதேசத்தின் **வாரணாசியில்** அமைக்க முடிவு செய்துள்ளன.

25) **ஹிந்தான் உயர்த்தப்பட்ட சாலை (Hindon Elevated Road) :** இந்தியாவிலேயே மிகவும் நீளமான உயர்த்தப்பட்ட சாலையான இது காசியாபாத்தையும் டெல்லியையும் (Ghaziabad - Delhi) இணைக்கிறது. 10.3 கிலோ மீட்டர் நீளம் கொண்ட இச்சாலை உத்தரப் பிரதேசத்தின் காசியாபாத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

26) **இந்திய நகர அமைப்புகளின் வருடாந்திர ஆய்வறிக்கை 2017** (Annual Survey of India’s City - Systems Report - 2017 [ASICS]): இவ்வறிக்கையின் படி நகர்ப்புற ஆளுகையில் மொத்தமுள்ள 23 நகரங்களுக்கான தர வரிசையில் **புனே (Pune) முதல் இடத்தைப் பிடித்துள்ளது; சென்னை 19-வது** இடத்திலும் **பெங்களூர் கடைசி இடத்திலும்** உள்ளன. இந்த அறிக்கையானது பெங்களூரைச் சேர்ந்த **‘ஜனக்ரஹா’ (Janaagraha)** என்னும் இலாப நோக்கற்ற நிறுவனத்தால் (Non-Profit Organisation) வெளியிடப்பட்டது.

27) **ஐ-மெட்ரோஸ்** (I-Metros) : Indian Metros எனும் இத்திட்டம் இந்தியாவிலுள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து, அவற்றின் செயல்முறைகள் மற்றும் அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதன் மூலம் தங்களின் செயல்திறனில் நிபுணத்துவத்தை அடைய வழிவகை செய்கிறது.

28) 12 வயதுக்குட்பட்ட பெண் குழந்தைகளைப் பாலியல் வல்லுறவு செய்யும் குற்றத்துக்கு மரண தண்டனை வழங்கும் சட்ட முன் வரைவினை அமல்படுத்தும் **இரண்டாவது மாநிலமாக இராஜஸ்தான்** உருவெடுத்துள்ளது. குற்றவியல் சட்டங்கள் (இராஜஸ்தான் சட்ட திருத்தம்) சட்ட முன் வரைவு, 2018 ஆனது இந்திய தண்டனைச் சட்டம், 1860-ல் (Indian Penal Code) 376-AA மற்றும் 376-DD என்னும் இரண்டு பிரிவுகளைச் சேர்த்துள்ளது. இவ்வகையான பெண் குழந்தைகளின் மீதான பாலியல் வல்லுறவுக்கு மரண தண்டனை அளிக்கும் சட்டத்தினை முதன் முறையாக **மத்தியப் பிரதேச மாநிலம்** 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அமல்படுத்தியது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

29) **மத்தியப் பிரதேச மாநில அரசு,** அரசு ஊழியர்களுக்கான ஓய்வு பெறும் வயதினை 60-லிருந்து 62 வயதாக உயர்த்தியுள்ளது.

30) பணிக்கொடை (திருத்த) சட்டமுன் வரைவு, (Payment of Gratunity Amendment) Bill, 2018) : இந்த சட்டமுன் வரைவானது 1972-ம் ஆண்டு பணிக்கொடைச் சட்டத்தின் படி பணியாளர்களுக்கு, அவர்களின் ஓய்வுக்குப் பிந்தைய சமூக பாதுகாப்பு (Social Security) அளிக்கவும், பெண் பணியாளர்களின் பேறு கால விடுப்பை 12 வாரங்களிலிருந்து 26 வாரங்களாக உயர்த்தி வழங்கவும் வழி வகை செய்கிறது.

31) **கடலோரக் காவலுக்கான தேசியக் கல்விச் சாலை** (National Academy of Coastal Policing) : குஜராத்தின் தேவபூமி துவாரகா (Devabhumi Dwarka) மாவட்டத்திலுள்ள 'குஜராத் மீன்வள ஆராய்ச்சி மையத்தில்' (Gujrat's Fisheries Research Centre) இந்தியாவின் முதலாவது 'கடலோரக் காவலுக்கான தேசியக் கல்விச் சாலை' அமைக்கப்பட உள்ளது.

32) **நபாகலேபர் திருவிழா** (Nabakalebar Festival) : இத்திருவிழாவானது ஒடிசா மாநிலம் பூரியிலுள்ள (Puri) ஜெகந்நாதர் ஆலயத்தில் நடைபெறுகிறது. இவ்விழாவினை நினைவு கூறும் வகையில் ரூபாய் 1000 மற்றும் ரூபாய் 10 மதிப்பிலான நாணயங்களைக் குடியரசுத் தலைவர் வெளியிட்டார்.

33) **மாதவ்பூர் மேளா** (Madhavpur Mela) : மத்தியக் கலாச்சார அமைச்சகமானது (Ministry of Culture) முதன் முறையாக மாதவ்பூர் மேளாவினை **குஜராத்தின்** போர்பந்தர் மாவட்டத்தில் நடத்தியது.

34) **'இந்தியாவில் பயில்வோம் திட்டம்' (Study in India Programme) :** மனித வள மேம்பாட்டு அமைச்சகமானது (Ministry of Human Resources Develoment) அயல்நாட்டு மாணவர்கள் இந்தியாவில் உயர்கல்வி பயில்வதை ஊக்குவிப்பதற்காக 'இந்தியாவில் பயில்வோம்' திட்டத்தைச் செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது.

35) **'இந்தியாவை அறிவோம்' திட்டம்** (Know India Programme) : மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகத்தினுடைய (Ministry of External Affairs) முயற்சியின் மூலம் கொண்டு வரப்பட்ட இத்திட்டமானது 18லிருந்து 30 வயதுக்குட்பட்ட இந்திய வம்சாவளியினர் (Persons of Indian Origin) இந்தியாவைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.

36) **கருணைக் கொலை** (Passive Euthanasia) **:** உச்ச நீதிமன்றம் 2018 மார்ச் 9 அன்று, தான் வழங்கிய தீர்ப்பின்படி கருணைக் கொலை செய்ய அனுமதி அளிக்கிறது. மேலும், அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 21-ன் படி 'கண்ணியத்துடன் இறக்கும் உரிமையை' (Right to die with dignity) அடிப்படை உரிமைகளில் ஒன்றாகக் கருத முடியும் எனத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

37) பஞ்சாப் அரசு, பகத்சிங் வீரமரணம் அடைந்த மார்ச் 23ம் நாளை ஒவ்வொரு ஆண்டும், **'இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் தினமாகக்' (Youth Empowerment Day)** கொண்டாட முடிவு செய்துள்ளது.

38) **நறுமணப் பொருள் பூங்கா** (Spice Park) : மத்திய அரசு மஞ்சளுக்கான நறுமணப் பொருள் பூங்காவினை **தெலுங்கானாவின் நிசாமாபாத்தில்** (Nizamabad) தொடங்கியுள்ளது. இந்தியாவில் மஞ்சள் உற்பத்தியில் தெலுங்கானா முன்னிலை வகிப்பதே இப்பூங்கா இங்கு தொடங்கப்பட்டதற்கான காரணமாகும்.

39) **லோசார் திருவிழா** (Losar Festival) : இவ்விழா புத்த சமயத்தினருக்கான புத்தாண்டாகக் கருதப்படுகிறது. அருணாச்சலப் பிரதேசத்தின் இடாநகரில் வாழும் புத்த சமயத்தினர் 2018 மார்ச் 5 அன்று இந்த லோசார் திருவிழாவின் வெள்ளி விழாவினைக் (Silver Jubilee) கொண்டாடினர்.

## சர்வதேசம்

1) **மடகாஸ்கர் (Madagascar)** நாட்டுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் **முதல் இந்தியக் குடியரசுத் தலைவர்** ராம்நாத் கோவிந்த் ஆவார்.

2) 2018 மார்ச் 8 அன்று நடைபெற்ற **மொரீஷியஸ் நாட்டின் 50-வது சுதந்திர தின விழாவின்** சிறப்பு விருந்தினராக இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் கலந்து கொண்டார்.

3) **இலங்கையில்** இசுலாமிய சிறுபான்மையினருக்கு எதிராக திட்டமிடப்பட்டு நடத்தப்பட்ட தாக்குதலைக் கட்டுப்படுத்த 10 நாட்கள் அவசர நிலைப் பிரகடனம் செய்யப்பட்டது.

4) இலங்கை அரசு **'சர்வதேச தொழிலாளர் தினத்தை' (International Workers Day)** மே 1லிருந்து மே 7ம் தேதிக்கு மாற்றியமைத்துள்ளது.

5) **"இந்தியாவில் தண்ணீரைச் சேமிப்பதற்கான தேசியப் பிரச்சாரத்தின்"** மீது (National Campaign for Water Conservation in India) இந்தியா-இஸ்ரேல் நாடுகளுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (Mou) ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

6) **குற்றம் இல்லாப் பகுதி** (Crime Free Zone) : இந்தியா-வங்கதேச எல்லைப் பகுதியில் சுமார் 8.3 கிலோ மீட்டர் நீளப்பகுதியானது 'குற்றம் இல்லாப் பகுதியாக' அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியானது குணார்மாத் (Gunarmath) மற்றும் கல்யாணி (Kalyani) என்னும் இந்திய எல்லைக் காவல் நிலையங்களையும் தவுலத்பூர் (Daulatpur) மற்றும் புத்காலி (Puthkhali) என்னும் வங்கதேசப் பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

7) **சர்வதேச யோகா திருவிழா** உத்தரகாண்டின் ரிஷிகேஷில் நடைபெற்றது. இதனை உத்தரகாண்ட் மாநில முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் தொடங்கி வைத்தார்.

8) **சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின்** (International Criminal Court) உறுப்பினர் பொறுப்பைத் துறந்து, அதிலிருந்து **பிலிப்பைன்ஸ்** வெளியேறியது.

9) **ரூப்பூர் அணுக்கரு உலை** (Roopur Nuclear Power Plant) **:** வங்கதேசத் தலைநகரான டாக்காவில் ரூப்பூர் அணுக்கரு உலையை கூட்டாக நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் **இந்தியா, வங்கதேசம் மற்றும் ரஷ்யா** ஆகிய நாடுகள் கையெழுத்திட்டன.

10) **இந்தி மொழிக்கான உலக தலைமையகம்** (World Hindi Secretariat) **:** இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் இந்தி மொழிக்கான உலக தலைமையகத்தினை **மொரீஷியஸின் போர்ட் லூயிஸ் (Port Louis)** நகரில் தொடங்கி வைத்தார்.

11) **பிராசாவில் பிரகடனம்** (Brazzaville Declaration) **:** இது உலகின் மிகப்பெரிய வெப்பமண்டலக் கரிநிலங்களைப் (Peatlands) பாதுகாக்கும் நோக்கத்துடன் வெளியிடப்பட்டப் பிரகடனமாகும். இது காங்கோ குடியரசின் தலைநகரான பிராசாவில்லில் கையெழுத்திடப்பட்டது. இந்தோனேசியா, காங்கோ குடியரசு (Republic of Congo) மற்றும் சனநாயகக் காங்கோ குடியரசு (Democratic Republic of Congo) ஆகிய நாடுகள் கூட்டாக இணைந்து இப்பிரகடனத்தில் கையெழுத்திட்டன.

12) **சாவரின் மெய்நிகர் நாணயம்** (Sovereign Crypto Currency) **: மார்ஷல் தீவுகள் (Marshall Islands)** நாடானது உலகிலேயே முதல் நாடாக, தன்னுடைய மெய்நிகர் நாணயமான **SOVEREIGN (SOV)**-ஐ சட்டப்படிச் செல்லும் நாணயமாக (legal tender) அறிவித்துள்ளது.

13) **நியூட்டன் - பாபா நிதியம்** (Newton - Bhabha Fund) **:** இந்தியா-இங்கிலாந்து (UK) ஆராய்ச்சிக் கூட்டிணைவினால் ஏற்படுத்தப்பட்ட இந்த நிதியம் ஆனது அறிவியல் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத் துறைகளின் வழியாக உலகளாவிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுகிறது.

14) **ஈராக் 38.9** மில்லியன் டன்கள் கச்சா எண்ணெயை இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளதன் மூலம் இந்தியாவின் **மிகப்பெரிய எண்ணெய் வழங்குனராக** உருவாகியுள்ளது. இதற்கு முன்னர் 30.9 மில்லியன் டன்கள் கச்சா எண்ணெயை இந்தியாவிற்கு வழங்கிய **சவுதி அரேபியாவை** பின்னுக்குத் தள்ளி, ஈராக் இந்தியாவிற்கு எண்ணெய் வழங்குவதில் முதல் இடம் பெற்றுள்ளது.

15) இந்தியா **திரவ நிலைப்படுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவை** (Liquified Natural Gas) **அமெரிக்காவிடமிருந்து** இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

16) மார்ச் 25-ம் நாளை **வங்கதேசம், 'இன அழிப்பு தினமாக'** (Genocide Day) அனுசரிக்கிறது.

## மாநாடுகள் & கருத்தரங்குகள்

1) **சர்வதேச சூரிய ஒளிக் கூட்டமைப்பு** (International Solar Alliance) : சர்வதேச சூரிய ஒளிக் கூட்டமைப்பின் முதல் மாநாடு, 2018 மார்ச் 11 அன்று புது தில்லியிலுள்ள குடியரசுத் தலைவர் மாளிகையில் (Rashtrapathi Bhavan) நடைபெற்றது. இம்மாநாட்டினை இந்தியாவும் பிரான்சும் கூட்டாக இணைந்து நடத்தின. 2022-ம் ஆண்டுக்குள் 175 GW அளவுக்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை உருவாக்குவதும் 100 GW அளவுக்கு சூரிய ஒளி ஆற்றலை உருவாக்குவதுமே இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் ஆகும். இந்த சர்வதேச சூரிய ஒளிக் கூட்டமைப்பு (ISA) ஆனது. 2015-ம் ஆண்டில் நடைபெற்ற பாரீஸ் பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டில் தொடங்கப்பட்டது.

2) **உலக டிஜிட்டல் மாநாடு (Global Digital Summit)** : கேரள அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாடு **'#Future'** என்னும் தலைப்பின் கீழ் கொச்சியில் (Kochi) நடைபெற்றது. இதன் கருத்துரு : **"டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கி"** (Towards a Digital Future).

3) **8வது மேடைக்கலைகளுக்கான ஒலிம்பிக்ஸ் (8th Theatre Olympics)** : துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்கள் எட்டாவது மேடைக் கலைகளுக்கான ஒலிம்பிக்ஸ் போட்டிகளை **புது தில்லியில்** தொடங்கி வைத்தார். ஜெய்ப்பூர் ஆனது இப்போட்டிகளை புதுதில்லியுடன் இணைந்து நடத்தும் இன்னொரு நகரமாகும். இப்போட்டிகளை 'நாடகக் கலைகளுக்கான தேசியப் பள்ளி' (National School of Drama) ஒருங்கிணைத்தது. இதன் கருத்துரு : **"Flag of Friendship".**

4) **FINE** : புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவுக்கான திருவிழாவினை (Festival of Innovation and Entrepreneurship - FINE) இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

5) **உலக எலும்புருக்கி நோய் தினமான மார்ச் 24 அன்று 'எலும்புருக்கி நோயில்லா இந்தியா' (Tuberculosis (TB) - Free India Campaign)** பிரச்சாரத்தையும் **'டெல்லி – எலும்புருக்கி நோய்க்கு முடிவுகட்டுதல் மாநாட்டினையும்'** (Delhi End - TB Summit) இந்தியப் பிரதமர் புது தில்லியில் தொடங்கி வைத்தார். எலும்புருக்கி நோயை முற்றிலும் அழித்தொழிப்பதற்கான இந்தியாவின் இலக்கு 2025ஆம் ஆண்டு உலக இலக்கு 2030ஆம் ஆண்டு ஆகும்.

6) இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் **உலகளாவிய அச்சு ஊடகத்திற்கான முதலாவது விழா (1st International Print Biennale)** புது தில்லியில் நடைபெற்றது. லலித் கலா அகாடமியால் நடத்தப் பெறும் இவ்விழா

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

வரைகலை அச்சு ஓவியங்களுக்கான சர்வதேச கண்காட்சியாக (International Exhibition of Graphic Prints) அமைந்துள்ளது.

7) **SATH-E திட்டம் :** நீதி ஆயோக் (NITI Aayog) அமைப்பானது பள்ளி மாணவர்களுக்கான "மனித ஆற்றலைக் கல்வியியல் தளத்தில் உருமாற்றி நீடித்த வளர்ச்சியினை அடையச் செய்யும்" (Sustainable Action for Transforming Human Capital in Education SATH-E) திட்டத்தினை வெளியிட்டுள்ளது.

## *திட்டங்கள்*

1) **ஒடிசா மாநில அரசு "நமது கிராமம், நமது முன்னேற்றம்" ("Ama Gaon, Ama Vikas" - "Our Village, Our Development")** எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் கிராம மக்களை, கிராமப்புற வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுத்திக் கொள்ள ஊக்குவிக்கிறது.

2) **உத்யம் சகி இணையவாயில் (Udyam Sakhi Portal)** : சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழிலகங்களுக்கான அமைச்சகமானது (The Ministry of Micro, Small and Medium Enterprises) பெண் தொழில்முனைவோர்களுக்காக www.udyamsakhi.org எனும் இணையவாயிலைத் (Portal) தொடங்கியுள்ளது. பெண்களுக்கான துறைசார்ந்த பயிற்சிகள், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் தொழில்சார்ந்த கருவிகள் பற்றிய விவரங்களை இது அளிக்கும். இந்த இணைய வாயில் 2018 மார்ச் 8 அன்று தொடங்கப்பட்டது.

3) **சுவிதா (Suvidha) : மத்திய அரசு** 'சுவிதா' எனப்படும், 100 விழுக்காடு காற்றின் மூலம் **இயற்கையாக மட்கும் வகையில் அமைந்த சுகாதாரமான அணையாடைகளை** (**100% Oxo-Biodegradable Sanitary Napkin)** வழங்கும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இவ்வகை அணையாடைகள், ரூபாய் 2.50க்கு ஒன்று என்ற வீதத்தில் நாடு முழுவதும் உள்ள 3200 அரசு மருந்துக் கடைகளிலும் **(Jan Aushadi Kendras)** கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

4) **குஷி திட்டம் (KUSHI) : ஒடிசா அரசு** தனது மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி மாணவிகளுக்கும் இலவச அணையாடைகளை **(Sanitary Napkins)** வழங்கும் குஷி திட்டத்தைத் தொடங்கியுள்ளது.

5) **(#Yes I Bleed Campaign) பிரச்சாரம்** : மத்திய அரசு பொதுமக்களுக்கு **மாதவிடாய் நிகழ்வு பற்றிய விழிப்புணர்வை** ஏற்படுத்த **'#Yes I Bleed'** எனும் பிரச்சாரத்தினை முகநூல், யூடியூப் **(YouTube)** போன்ற சமூக வலை தளங்களில் தொடங்கி வைத்துள்ளது.

6) **யூரியா மானியத் திட்டம் :** முழுவதுமாக இந்திய அரசால் நிதியளிக்கப்படும் யூரியா மானியத் திட்டம் **(Urea Subsidy Scheme)** 2017 ஏப்ரல் 1-லிருந்து

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

நடைமுறைப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 2019-20 ஆகிய ஆண்டுகள் வரை செயல்பாட்டில் இருக்கும்.

7) **கிரிஷி உன்னதி மேளா (Krishi Unnati Mela) :** இந்நிகழ்வு வேளாண் துறையில் அண்மையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சிகளைப் பற்றிய விழிப்புணர்வை விவசாயிகள் மத்தியில் ஏற்படுத்துவதற்காக புதுதில்லியில் நடைபெற்றது.

8) **இம்பிரின்ட் II (IMPRINT II) :** இத்திட்டம் இந்தியத் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் (IIT's) மற்றும் இந்திய அறிவியல் பல்கலைக் கழகத்தின் (IISc) கூட்டு முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதாகும். இத்திட்டம் அயல்நாடுகளை வெகுவாகச் சார்ந்திருக்கும் தொழில்நுட்பத் துறைகளைக் கண்டறிந்து அவற்றில் ஆராய்ச்சி செய்தலை ஊக்குவிக்கிறது.

9) **தூய்மை ஆற்றல் 2018 (Swachh Shakti 2018)** : இது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் உத்தரப் பிரதேசத்தின் லக்னோவில் நடைபெற்றது. கிராமப் பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்திற்கு மகத்தான பங்காற்றும் பெண்களைக் கவுரவிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

10) மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் (Ministry of External Affairs) **'விதேஷ் அயா பிரதேஷ் கே தவார்' (Videsh Aaya Pradesh Ke Dwaar)** எனும் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இது பிராந்திய ஊடகங்களுடன் சேர்ந்து செயல்படுவதை ஊக்குவிப்பதற்காக தெலுங்கானாவின் ஐதராபாத்தில் தொடங்கப்பட்டது.

11) **தேசிய ஊட்டச்சத்து இயக்கம் (National Nutrition Mission):-** இத்திட்டம் ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள், வளரிளம் பெண்கள் (Adolescent Girls) கருவுற்ற பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் ஊட்டச் சத்துடன் வாழ்வதை உறுதி செய்வதற்காக 2017-18ல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் அடுத்த மூன்று ஆண்டுகளில் இந்த இலக்கினை அடையத் திட்டமிட்டுள்ளது.

12) மத்திய அரசு **"பெண் குழந்தையைப் பேணுவோம், பெண் குழந்தைக்குக் கற்பிப்போம்" 'Beti Bachao Beti Padhao'** எனும் திட்டத்தினை 161 மாவட்டங்களிலிருந்து நாடு முழுவதுமுள்ள 640 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தியுள்ளது. இத்திட்டம் முதன் முதலில் ஹரியானாவில் 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

13) **தேசிய தெரு விளக்கு அமைக்கும் திட்டம் (Street Lightning National Programme) :** இது தெரு விளக்குகளை மாற்றியமைக்கக் கூடிய உலகின் மாபெரும் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் 1.34 கோடி மரபு சார்ந்த குழல் விளக்குகளை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக திறன் வாய்ந்த LED விளக்குகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் படி, 2019, மார்ச் மாதத்துக்குள் இந்த இலக்கை எட்டிவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முதன் முதலில் செயல்பாட்டுக்காக எடுத்துக் கொண்ட மாநிலம் இராஜஸ்தான் ஆகும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

14) **லக்ஷ்யா திட்டம் (LaQshya Programme) :** இத்திட்டம் மகப்பேறு காலங்களில் பயன்படுத்தப்படும் பிரசவ அறைகள் மற்றும் அறுவைச் சிகிச்சை மையங்களின் (Operation Theatre) தரத்தினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

15) **பெண் தொழில்முனைவோருக்கான தளம் (Women Entrepreneurship Platform) :** நீதி ஆயோக் (NITI Aayog) அமைப்பானது இந்தியா முழுவதிலும் உள்ள பெண்கள், தங்களின் தொழில்முனைவு இலட்சியங்களைச் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள ஏற்ற வகையிலான வர்த்தகச் சூழலை ஏற்படுத்திக் கொள்வதற்காக இந்தத் தளத்தினை (Platform) உருவாக்கியுள்ளது. இதன் கருத்துரு : **“நாரி சக்தி” (Naari Shakti).**

16) **சட்டமியற்றுபவர்களுக்கான தேசியக் கருத்தரங்கினை (National Legislators Conference)** பிரதமர் புது தில்லியில் தொடங்கி வைத்தார். இதன் கருத்துரு : **“முன்னேற்றத்துக்காக நாம்” (We for Development).**

## பாதுகாப்பு & விண்வெளி

1) **GSAT 6A :** இஸ்ரோ தனது **இரண்டாவது S-கற்றை தகவல் தொடர்பு செயற்கைக் கோளான** GSAT 6A-னை 2018 மார்ச் 29 அன்று ஆந்திரப் பிரதேசத்தின் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து விண்ணிற்கு செலுத்தியது. **GSLV F08** ராக்கெட் மூலம் விண்ணிற்கு செலுத்தப்பட்டது. GSLV வரிசையில் செலுத்தப்பட்ட **12வது** செயற்கைக்கோள் திட்டமாகும். இச்செயற்கைக்கோள் செலுத்தப்பட்ட இரண்டு நாட்களில் இதனுடனான தகவல் தொடர்பு எதிர்பாராத விதமாகத் துண்டிக்கப்பட்டது.

2) **GOES-S:** உலகின் மிகவும் மேம்படுத்தப்பட்ட திறனுடன் கூடிய வானிலை முன்னறிவிப்பு செயற்கைக் கோளான GOES-Sஐ **அட்லஸ் V ராக்கெட்** (Atlas V Rocket) மூலம் நாசா விண்ணில் செலுத்தியது.

3) **வருணா** - 18 **(Varuna - 18) : இந்தியா-பிரான்சு** நாடுகளுக்கிடையே ஆண்டு தோறும் நடைபெறும் இரு தரப்பு கடற்படைப் பயிற்சியான வருணா-18 ஆனது. இவ்வருடம் அரபிக் கடலின் கோவா கடல் பகுதியில் நடைபெற்றது.

4) **ஜூனைபர் கோப்ரா** 2018 **(Juniper Cobra 2018) : இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா** (USA) ஆகிய நாடுகளுக்கிடையே நடைபெறும் இந்த இராணுவப் பயிற்சி, ஆனது இவ்வாண்டு இஸ்ரேலில் நடைபெற்றது.

5) **ATGM நாக் (ARGM Nag)** : உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, பீரங்கிகளைத் தாக்கி அழிக்க வல்ல ஏவுகணையான **நாக் (Anti Tank Guided Missiule Nag)** பாலைவனப் பகுதிகளில் வெற்றிகரமாக சோதித்துப் பார்க்கப்பட்டது. வெவ்வேறு

தொலைவுகளில் அமைக்கப்பட்ட இரு வேறுபட்ட பீரங்கி இலக்குகளை வெற்றிகரமாக இந்த நாக் ஏவுகணை சுட்டு வீழ்த்தியது.

6) **INS GANGA :** இந்தியக் கடற்படையில் பணியாற்றிய கோதாவரி வரிசையினைச் சேர்ந்த ஏவுகணை தாங்கிய கப்பலான (Godavari Class guided missile frigate) ஐ.என்.எஸ். கங்கா, 2018 மார்ச் 22 அன்று மும்பை கடற்படைத் தளத்திலிருந்து ஓய்வு பெற்றது. இக்கப்பலானது 1985 டிசம்பர் 30 அன்று பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

7) **பாஸ்சிம் லெஹார் (Paschim Lehar)** என்பது இந்திய இராணுவப்படை (Indian Army), கடற்படை (Navy), வான்படை (Air Force) மற்றும் கடலோரக் காவல்படை ஆகியவை கூட்டாகச் சேர்ந்து நடத்திய **முப்படைகளின் கடற்படைப் போர்ப் பயிற்சி (Tri Service Maritime Exercise)** ஆகும். இப்பயிற்சி அரபிக் கடலில் நடைபெற்றது.

8) **லியானிங் (Liaoning) : *சீனா*** தனது முதலாவது அணு ஆற்றலால் இயங்கும் விமானம் தாங்கிக் கப்பலான (1st Nuclear Powered aircraft Carrier) லியானிங்கை செயல்பாட்டுக்குக் கொண்டு வர உள்ளது. இக்கப்பலானது சீன கப்பல் கட்டும் தொழில் நிறுவனத்தால் (Chitra Shipbuilding Industry Corporation) வடிவமைக்கப்பட இருக்கிறது.

9) **MILES - 18 :** இது **மிலன் கடற்பயிற்சியின் (MILAN Excercise) 10வது பதிப்பின்** ஒரு பகுதியாக நடைபெற்ற போர்ப்பயிற்சியாகும். MILES - 18 பயிற்சியில் இந்தியாவின் 9 கடற்படை போர்க் கப்பல்களும் மற்ற 8 நாடுகளைச் சேர்ந்த 11 கப்பல்களும் கலந்து கொண்டன. இதன் கருத்துரு : **"கடல் எல்லைகளைத் தாண்டிய நட்பு" (Friendship across the seas)** இப்பயிற்சி அந்தமான் கடலில் நடைபெற்றது. மேலும் இது அந்தமான் & நிக்கோபார் கடற்படைப் பிரிவினால் (Andaman & Nicobar Naval Command) முதன் முதலாக நடத்தப்பட்ட பல நாடுகளுக்கிடையிலான கடற்படைப் போர் பயிற்சி (Multi-nation naval exercise) ஆகும்.

10) **ICG C-162 :** பாரதி பாதுகாப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்தால் (Bharati Defence and Infrastructure Ltd) வடிவமைக்கப்பட்ட உயர் வேக இடைமறிக்கும் படகான (High speed interceptor boat) ICG C-162 கர்நாடகாவின் மங்களூர் கடற்படைத் தளத்திலிருந்து இந்தியக் கடலோரக் காவல் படைக்கு (Indian Coast Guard) அளிக்கப்பட்டது.

11) **K2-229 b** எனும் புதிய, புவிக்கோளத்தின் வடிவையொத்தக் (earth sized planet) கோளானது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கோளின் கண்டுபிடிப்பில் டாப்ளர் நிற மாலையியல் தொழில்நுட்பம் (Doppler Spectroscopy Technique) அல்லது அலையியல் தொழில்நுட்பம் (Wobble technique) பயன்படுத்தப்பட்டிக்கலாம் என்று கருதப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

12) **M 777 :** இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இருவரும் கூட்டாக இணைந்து M 777 எனும் **மீ-ஒளி ஹோவிட்சர்கள் (Ultra - light Howitzer)** மீதான பரிசோதனையை இராஜஸ்தானின் பொக்ரான் ஆயுதச் சோதனைப் பகுதியில் நடத்தின.

13) **Kh-47 M2 : கின்ஷால் (Kinzhal)** என்றும் அழைக்கப்படும் Kh-47 M2 ஒரு மீயொலி வேகத்தில் வான்வழியாகச் செலுத்தப்படவல்லத்தக்க கண்டம் விட்டு கண்டம் பாயும் (hypersonic aero ballistic missile) ஏவுகணை ஆகும். இந்த ஏவுகணையானது ரஷ்ய வான் படையினரால் (Russian Aerospace Forces) MIG - 31 BM போர் விமானத்திலிருந்து ஏவப்பட்டுச் சோதிக்கப்பட்டது.

14) **சாம்வேத்னா** 2018 **(Samvedna 2018)** : இது இந்திய வான்படையால் (IAF), தெற்காசியப் பகுதியில் **முதன் முதலாக நடத்தப்பட்ட பல தரப்பு மனிதாபிமான உதவி மற்றும் பேரிடர் தணிப்புக்கான (Multi lateral Humanitarian Assistance and Disaster Relief Air Exercise) வான்வழிப்** பயிற்சியாகும். கேரளக் கடற்பகுதியில் நடைபெற்ற இப்பயிற்சியில் வங்கதேசம், இலங்கை, ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் மியான்மர் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன. சாம்வேத்னா (Samvedna) என்றால் பரிவு (Empathy) என்று பொருள்படும்.

15) **வளைகுடாக் கவசம்** 1 **இராணுவப் பயிற்சி (Gulf Shield 1 Millitary Exercise):** இந்த இராணுவப் பயிற்சியானது, வளைகுடா நாடுகள் கூட்டமைப்புக் குழுவில் (Gulf Co-Operation Council) உள்ள நாடுகளையும் சேர்த்து மொத்தம் 23 நாடுகளுக்கிடையே நடைபெற்றது. சவுதி அரேபியாவின் கிழக்குப் பிராந்தியத்தில் இப்பயிற்சியானது நடைபெற்றது.

16) **TESS :** நாசாவானது (NASA) Space X நிறுவனத்துடன் இணைந்து **Transiting Exoplant Survey Satellite** எனும் செயற்கைக் கோளை ஏவவிருக்கிறது. இது கடத்துநிலை முறையில் (transit method) வெளிக்கோள்களைக் (exoplanets) கண்டறிய உதவுகிறது.

17) **இரட்டை பெய்டூ - 3 (Twin Beidou - 3):** Beidou என்பது சீனாவின் பயண அமைப்பில் செயற்கைக் கோள் (navigation satellite) கோள் அமைப்பாகும். அண்மையில் சீனா Beidou - 30 and Beidou - 31 என்னும் இரட்டை பயண அமைப்பியல் செயற்கைக் கோள்களை Long March - 3B ராக்கெட் மூலம் விண்ணிற்குச் செலுத்தியது.

18) **இன்சைட் திட்டம் (Insight Mission):** செவ்வாய்க் கோளினை ஆராய்ச்சி செய்வதற்காக Insight (**I**nterior **E**xploration using **S**eismic **I**nvestigations, **G**eodesy and **H**eat **T**ransport) எனும் திட்டத்தினை நாசா (NASA) 2018, மே மாதத்தில் தொடங்கியுள்ளது.

19) **RS - 28 சர்மட் (RS - 28 Sarmat) :** அணு ஆயுதங்களை ஏந்திச் சென்று கண்டம் விட்டு கண்டம் தாக்க வல்ல ஏவுகணையான (Nuclear Inter Continental

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

Ballistic Missile) RS - 28 Sarmat - ஐ ரஷ்யா வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.

20) **SLCM - பாபர்** : பாகிஸ்தான் கடற்படையானது, உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட, நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து ஏவப்படும் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையான (Submarine Launched Ballistic Missile) SLCM - பாபரை (SLCM-BABUR) வெற்றிகரமாகச் சோதித்துப் பார்த்தது.

21) இந்திய வான்படையின் (IAF) கனரக வானூர்தியான C-17 Globe Master ஆனது அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள இந்திய-சீன எல்லைப் பகுதியில் முதன் முறையாகத் தரையிறக்கப்பட்டது.

## *அறிவியல் & தொழில்நுட்பம்*

1) **சூடான்** நாட்டில் வாழ்ந்த, உலகின் கடைசி மிருகம் என்று கருதப்பட்ட வட அரைக்கோளத்தில் மட்டுமே வாழும் **வெள்ளைக் காண்டாமிருகம் (Northern White Rhino)** அண்மையில் உயிரிழந்தது.

2) **இன்டர்ஸ்டிடியம் (Interstitium) :** ஆராய்ச்சியாளர்கள் இன்டர்ஸ்டிடியம் என்னும் புதிய உறுப்பினை மனித உடலில் கண்டு பிடித்துள்ளனர். மனித உடலின் **80வது** உறுப்பாகக் கருதப்படும் இது, மனித உடலிலேயே மிகப்பெரிய உறுப்பாகவும் இருக்கலாம். இதற்கு முன் **மீசென்ட்ரி (Mesentry)** எனும் உறுப்பு **79வது** உறுப்பாகக் கண்டறியப்பட்டது.

3) தென் ஆப்பிரிக்காவிலுள்ள குல்லினான் சுரங்கத்தில் (Cullinan Mines) இருந்து எடுக்கப்பட்ட ஒரு வைரத்தின் உட்பகுதியில் **கால்சியம் சிலிக்கேட் பெரோவ்ஸ்கைட்** (Calcium Silicate Perovskite) என்னும் தனிமம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

4) Hetero Healthcare நிறுவனம் எச்.ஐ.வி எய்ட்ஸைக் குணப்படுத்தும் மருந்து என்று பெயரிட்டுள்ள **'TAFERO - EM'**-ஐ இந்தியாவில் தொடங்கியுள்ளது.

5) **பண்டிகூட் ரோபோட் (Bandicoot Robot) : கேரள அரசு மனிதக் கழிவுகளை** மனிதர்களே அகற்றும் (manual scavenging free) நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக, பண்டிகூட் ரோபோவை (Bandicoot Robot) உருவாக்கியுள்ளது. மனிதக் கழிவுகளை அகற்றுவதற்கு, ரோபோவை வடிவமைத்த முதல் மாநிலம் கேரளாவாகும்.

6) **புவி நேரம்** - 2018 **(Earth Hour 2018) :** பருவநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வை உலகம் முழுவதும் ஏற்படுத்தும் வகையில் 2018 மார்ச் 24 அன்று புவி நேரம் (Earth Hour) என்னும் நிகழ்வு அனுசரிக்கப்பட்டது. இதன்படி உலகம் முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் இரவு 8.30 மணியிலிருந்து 9.30 மணி வரையிலான ஒரு மணி நேரத்துக்கு அனைத்து விளக்குகளையும் அனைத்து வைக்கும்

நடைமுறை பின்பற்றப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் கடைசி வியாழக்கிழமை அன்று புவி நேரம் (Earth Hour) அனுசரிக்கப்படுகிறது. உலகளாவிய இந்த முன்னெடுப்பானது உலக வன உயிர்கள் நிதியத்தின் (World Wild Life - WWF) முயற்சியினால் நடைபெறுகிறது.

7) **சச் - கவுரவ் (Sach-Gaurav) :** இந்தியாவில் குளோனிங் மூலம் முதல் முறையாக உருவாக்கப்பட்ட **அஸ்ஸாமிய ஆண் எருமைக் கன்றுக்கு (Assamese buffallo male Calf)** சச் கவுரவ் (Sach - Gaurav) என்று பெயரிடப்பட்டுள்ளது. முர்ரா (Murrah) இன எருமைக்குப் பிறந்த இக்கன்று ஹரியானாவின் ஹிஸ்ஸார் (Hissar) நகரில் பிறந்தது.

8) **கடக்நாத் கோழி (Kadaknath Chicken) :** கருமை நிறத் தோற்றம் கொண்ட இக்கோழி **மத்தியப் பிரதேச மாநிலத்தில்** காணப்படுகிறது. அண்மையில் இந்த கடக்நாத் கோழி **புவிசார் குறியீடு (GI tag)** அந்தஸ்தினைப் பெற்றுள்ளது.

9) **திலோமெரா நாகாலாந்தா (Ptilomera Nagalanda) :** அறிவியலாளர்கள் புது வகையான, **நீர்ப் பூச்சி (Water Strider)** இனங்களின் கீழ் வரும் திலோமெரா நாகலந்தா (Ptilomera Nagalanda) என்னும் பூச்சியினத்தைக் கண்டறிந்துள்ளனர். இப்பூச்சியானது Ptilomera agriodes genus என்னும் வகைப்பாட்டியலைச் சேர்ந்தது.

10) **ஃப்ளோரி மீட்டர் (Flourimeter) :** மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பத்துக்கான ராஜா ராமண்ணா ஆராய்ச்சி மையம் (The Raja Ramanna Centre for Advanced Technology) மற்றும் அணு ஆற்றல் துறை (Department of Atomic Energy) ஆகிய இரண்டு அமைப்புகள் இணைந்து ஃப்ளோரிமீட்டரை (Flourimeter) வடிவமைத்துள்ளன. தண்ணீரில் உள்ள யுரேனிய மாதிரிகளைக் கண்டறிவதற்காக இந்த ஃப்ளோரிமீட்டர் பயன்படுகிறது.

11) **AgCuTe :** பெங்களூரில் உள்ள "ஜவஹர்லால் நேரு மேம்படுத்தப்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மையம்" (Jawaharlal Nehru centre for Advanced Scientific Research) **சில்வர் காப்பர் டெல்லுரைட் (Silver Copper Telluride)** என்னும் புதிய வகை சேர்மத்தைக் (Compound) கண்டறிந்துள்ளது. இச்சேர்மம் குறைவான வெப்பக் கடத்தும் திறனையும் (Poor thermal conductivity) அதிகமான மின் கடத்தும் திறனையும் (good electrical conductivity) பெற்றுள்ளது.

12) **சாபோஷி (Saposhi) : சாபோஷி தீம்பொருள் (Saposhi Malware)** ஆனது எலக்ட்ரானிக் சாதனங்களைத் தாக்கி அவற்றின் செயல்பாட்டைக் குலைக்க வல்லது. Distributed Denial of Service Attacks-க்கிற்காக இந்த தீம்பொருள் பயன்படுத்தப்படுகிறது.

13) **ஆயுஷ் QOL-2C (AYUSH QOL - 2C) :** ஆயுர்வேத அறிவியலுக்கான மத்திய ஆராய்ச்சிக் குழு (Central Council for Research in Ayurvedic Sciences)

மற்றும் ஆயுஷ் அமைச்சகம் ஆகிய இரண்டு அமைப்புகளும் இணைந்து AYUSH QOL-2C எனும் மருந்தினைத் தயாரித்துள்ளனர். இம்மருந்து புற்று நோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் திறன் கொண்டது.

14) **செயற்கை இதயம் (Artificial heart)** : ராக்கெட் தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படும் காந்தவியல் மற்றும் கூழ்மவியல் உயர்த்தல் (Magnetic and fluid levitation) முறையின் மூலம் செயற்கையாகச் செயல்படும் இதயத்தினை (artificial heart) சீன விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

15) **சுகத் யாத்ரா செயலி (Sukhad Yatra app) மற்றும் 1033 இலவச உதவி மைய எண் (1033 Toll free)** ஆகிய இரண்டு சேவைகளும் நெடுஞ்சாலையில் பயணம் செய்பவர்களுக்கு உதவும் வகையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் (NHAI) ஏற்படுத்தப்பட்டவை. இவ்விரு சேவைகளும் அவசர நிலையின் போது (Emergency Condition) உதவி செய்யும் வகையில் நெடுஞ்சாலைகள் தொடர்பான பின்னூட்டங்களை (feed back) அளிக்கவும் பயன்படுகின்றன.

16) **கிரேம் புரி (Krem Puri)** : உலகிலேயே மிகவும் நீளமான சுண்ணாம்புப் பாறைகளுக்கிடையிலான குகையானது (Sandstone Cave) **மேகாலயாவிலுள்ள கிழக்கு காசி மலைகள் (East Khasi Hills District)** மாவட்டத்தின் மாசின்ரம் (Mawsynram) பகுதியில் அமைந்துள்ள லைட்சோகும் (Laitsohum) கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கிரேம் புரி (Krem Puri) என்று பெயரிடப்பட்ட இந்த சுண்ணாம்புக் குகை 24583 மீட்டர் நீளமுடையது; அதாவது எவரெஸ்ட் சிகரத்தை (8848 மீட்டர்) விட மூன்று மடங்கு அதிக நீளம் கொண்டது.

17) **களைக்கொல்லி தாங்குதிறனுடைய பருத்தி (Herbicide Tolerant Cotton) அல்லது 3G-III பருத்தி (3G-III Cotton)** எனப்படும் இவ்வகைப் பருத்தி சட்டவிரோதமாக நான்கு மாநிலங்களில் பயிர் செய்யப்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் (Ministry of Science and Technology) கீழ் செயல்படும் உயிர்த் தொழில்நுட்பவியல் துறையானது (Department of Biotechnology) கள ஆய்வு மற்றும் அறிவியல் பூர்வமான மதிப்பீட்டுக் குழுவினை (Field Inspection and Scientific Evaluation Commitee) அமைத்துள்ளது.

18) ஆப்பிரிக்கக் காடுகளில், **ஆப்பிரிக்க - சவான்னா யானைகள் (African - Savannah)** என்று பெயரிடப்பட்டுள்ள **மூன்றாவது புதிய யானை இனம்** அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அதன் இருப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. ஆசிய யானைகள் மற்றும் ஆப்பிரிக்க யானைகள் ஆகியவை மற்ற இரண்டு யானை இனங்களாகும்.

19) **Cops Eye செயலி (Cops Eye App)** : மதுரை மாநாகரக் காவல்துறையினரால் அறிமுகப்படுத்தப்பட்ட இச்செயலி குற்றப் பின்னணியுள்ளவர்களை அவர்களின் புகைப்பட மாதிரிகளுடன் ஒப்பிட்டுக் கண்டறிய உதவுகிறது. இதற்காக இச்செயலி 'முக

அடையாளம்' (face recognition) காணும் தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்துகிறது.

## பொருளாதாரம்

1) **நிதிப் பற்றாக்குறை (Fiscal Deficit) :** நடப்பு நிதி ஆண்டின் நிதிப் பற்றாக்குறைக்கான பட்ஜெட் இலக்கு 113.7 விழுக்காட்டினை எட்டியுள்ளது.

2) 2017-18 டிசம்பர் மாதத்துடன் நிறைவடையும் காலாண்டில் **7.2% GDP** மற்றும் 6.7% GVA என்னும் இலக்குகளை எட்டிய இந்தியப் பொருளாதாரம், தேக்க நிலையிலிருந்து மீண்டு, மறுபடியும் உலகின் வேகமாக முன்னேறும் பொருளாதாரமாக (World's Fastest Growing Economy) மாறியுள்ளது.

3) **பொருளாதார ஆய்வறிக்கையின் படி** (Economic Survey), இந்தியப் பொருளாதாரம் ஆனது 2018-19 நிதி ஆண்டில் **7-7.5%** என்னும் வளர்ச்சி வீதத்தில் இருக்கும் என நம்பப்படுகிறது.

4) **ஐரோப்பிய மீள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி வங்கியில்** (European Bank for Reconstruction and Development - EBRD) **69வது** உறுப்பினராக **இந்தியா** இணைந்துள்ளது.

5) **உலக மகிழ்ச்சிக் குறியீடு** 2018 **(World Happiness Index 2018) :** இக்குறியீடானது ஐ.நா.வின் நீடித்த வளர்ச்சிக்கான தீர்வுகள் வலையமைப்பினால் **(UN Sustainable Development Solutions Network)** வெளியிடப்படுகிறது. இக்குறியீட்டுத் தரவரிசையில் **இந்தியா** மொத்தமுள்ள 156 **நாடுகளில்** 133**வது** இடத்தைப் பெற்றுள்ளது. (2017ம் ஆண்டில் இந்தியா 122வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது) மேலும் இக்குறியீட்டினுடைய முதலாவது இடத்தில் ஃபின்லாந்தும் (Finland) இறுதி இடத்தில் புருண்டியும் (Burundi) உள்ளன.

6) **ஆற்றல் மாற்றக் குறியீடு** 2018 **(Energy Transition Index 2018) : உலகப் பொருளாதார மன்றத்தால்** (World Economic Forum) வெளியிடப்படும் இக்குறியீட்டின் தரவரிசையில் மொத்தமுள்ள 114 நாடுகளில் **இந்தியா 78வது** இடத்தைப் பெற்றுள்ளது. இத்தரவரிசையில் முதலாவது இடத்தில் சுவீடனும் (Sweden) இறுதி இடத்தில் தென் ஆப்பிரிக்காவும் உள்ளன.

7) **போர்த்திறன் கொண்ட நாடுகளுக்கான சர்வதேசக் குறியீடு** 2017 **(Global Firepower Index 2017) :** இக்குறியீட்டின் படி, இந்திய இராணுவம் உலகிலேயே நான்காவது வலிமையான இராணுவமாக உள்ளது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் இக்குறியீட்டின் முதல் மூன்று இடத்தில் உள்ளன. இக்குறியீடானது Global Fire Power வலைதளத்தால் வெளியிடப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# விருதுகள்

1) 90வது ஆஸ்கார் விருதுகள் :

| | | |
|---|---|---|
| 1. | சிறந்த திரைப்படம் (Best Movie) | ஷேப் ஆஃப் வாட்டர் The Shape of Water |
| 2. | சிறந்த நடிகர் (Best Actor) | கேரி ஓல்ட்மேன் (Gary Oldman) [Darkest Hour திரைப்படத்தில் வின்ஸ்டன் சர்ச்சில் கதாபாத்திரம் ஏற்று நடித்ததற்காக வழங்கப்பட்டது] |
| 3. | சிறந்த நடிகை (Best Actress) | ஃபிரான்சஸ் மெக்டார்மண்ட் (Frances Mc Dormand) [Three Billboards Outside Ebbing, Missouri திரைப்படத்தில் மில்ட்ரெட்ஹேயஸ் எனும் கதாபாத்திரம் ஏற்று நடித்ததற்காக வழங்கப்பட்டது.] |
| 4. | சிறந்த இயக்குநர் (Best Director) | கில்லெர்மோ டெல் டோரோ (Guillermo del Toro) [The Shape of Water திரைப்படத்தை இயக்கியதற்காக வழங்கப்பட்டது.] |
| 5. | சிறந்த அசைவூட்டப்பட்ட திரைப்படம் (Best Animated Feature Film) | Coco (இயக்குநர் : Lee Unkrich) |
| 6. | சிறந்த அசைவூட்டப்பட்ட குறும்படம் (Best Animated Short Film) | Dear Basketball |
| 7. | சிறந்த அயல்மொழித் திரைப்படம்<br><br>(Best Foreign Language Film) | A Fantastic Woman (ஸ்பானிய மொழித் திரைப்படம்) |
| 8. | இந்தியாவிலிருந்து ஆஸ்கார் விருதுக்குச் பரிந்துரைக்கப்பட்ட திரைப்படம் | இந்தியாவிலிருந்து நியூட்டன் (Newton) என்னும் திரைப்படம் 90வது ஆஸ்கார் விருதுகளுக்காக பரிந்துரைக்கப்பட்டது. |
| 9. | பல்வேறு விருதுத் தலைப்புகளின் கீழ் பரிந்துரை செய்யப்பட்ட படங்கள் (Multiple Nominations) | The Shape of Water - 13 விருதுகளுக்கு<br><br>Dunkirk - 8 விருதுகளுக்கு<br><br>Three Billboards Outside Ebbing, Missouri - 7 விருதுகளுக்கு |
| 10. | பல விருதுகள் பெற்ற திரைப்படங்கள் | The Shape of water - 8 விருதுகள்<br><br>Dunkirk - 3 விருதுகள் |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

2) **ஏபெல் பரிசு 2018 (Abel Prize 2018)** (இது கணிதத்துறையில் வழங்கப்படும் நோபல் பரிசாகக் கருதப்படுகிறது.) : கனடாவைச் சேர்ந்த **ராபர்ட் P. லாங்லாண்ட்ஸ்** (Robert P.Langlands) என்னும் கணிதவியலாளர் 2018-ம் ஆண்டுக்கான ஏபெல் பரிசினைப் பெற்றுள்ளார். எண்களுக்கான கோட்பாட்டினையும் (Number Theory) பிரதிநிதித்துவ கோட்பாட்டினையும் (Representation Theory) இணைத்து இவர் செய்த ஆராய்ச்சிக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. 2007ம் ஆண்டின் ஏபெல் பரிசினை **ஸ்ரீநிவாச வரதன்** என்னும் இந்தியர் பெற்றிருந்தது குறிப்பிடத்தகுந்தது.

3) **பிரிட்ஸ்கர் பரிசு (Pritzker Prize) :** இது கட்டிடக் கலைத் துறையில் வழங்கப்படும் நோபல் பரிசாகக் கருதப்படுகிறது. இப்பரிசினை **பாலகிருஷ்ண தோஷி** என்னும் **இந்தியர்** பெறுகிறார். 45வது முறையாக வழங்கப்படும் இப்பரிசினை **ஒரு இந்தியர் பெறுவது இதுவே முதல் முறையாகும்.** குறைந்த செலவிலான வீடுகளை (low cost houses) வடிவமைத்தற்காக இப்பரிசு பாலகிருஷ்ண தோஷி அவர்களுக்கு வழங்கப்பட்டது.

4) **சத்ருகன் சின்ஹா (Shatrugan Sinha) :** கலை மற்றும் அரசியல் துறைகளில் அவர் ஆற்றிய பங்களிப்புகளுக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது (Lifetime Achievement Award) வழங்கப்பட்டது.

5) **நாரி சக்தி புரஸ்கார்** 2017 **(Nari Shakti Puraskar 2017) :** இந்தியக் கடற்படையின் 'Navika Sagar Parikrama' திட்டத்தின் கீழ் செயல்பட்ட **ஐ.என்.எஸ்.வி தாரிணி (INSV Tarini)** குழு இவ்விருதினைப் பெற்றுள்ளது. சர்வதேச பெண்கள் தினமான 2018 மார்ச் 8 அன்று இவ்விருது INSV Tarini குழுவுக்கு வழங்கப்பட்டது. 2017 செப்டம்பர் 10 அன்று தனது கடற் பயணத்தை தொடங்கிய INSV Tarini குழு 254 நாட்கள் நீண்ட கடற் பயணத்திற்குப் பிறகு 2018 மே 21 அன்று தனது பயணத்தை முடித்துக் கொண்டது.

6) ஜெர்மனியின் பெர்லின் நகரில் நடைபெற்ற **உலக சுற்றுலா மாநாட்டில் (World Tourist Meet),** சிறந்த காட்சிப்படுத்துதலுக்கான விருதினை (Best Exhibitor Award) இந்தியா வென்றது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட "Yogi of the Racetrack" என்னும் குறும்படம் இம்மாநாட்டில் திரையிடப்பட்டது.

7) **கோச்சோன் பரிசு** 2017 **(Kochon Prize 2017) :** கோச்சோன் அறக்கட்டளையினால் வழங்கப்படும் 2017ம் ஆண்டுக்கான கோச்சோன் விருது **இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்கு (Indian Council of Medical Research)** வழங்கப்பட்டது. காசநோய் (TB) தொடர்பான ஆராய்ச்சிகளில் நிபுணத்துவம் பெற்று விளங்கியதால் இவ்விருது ICMR நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.

8) **காவல்துறை புலனாய்வில் சிறந்து விளங்கியமைக்காக வழங்கப்படும் மத்திய உள்துறை அமைச்சரின் விருது (Union Minister's medal for Excellence in Police Investigation)** : இந்த விருது மாநில அல்லது யூனியன் பிரதேச காவல்துறை நிர்வாகம் மற்றும் மத்தியப் புலனாய்வு முகமைகளில் குற்றங்களை

விசாரிக்கும் முறைமையில் உயர்ந்த தொழில்நுட்ப தரத்தினை நடைமுறைப்படுத்த உதவுகிறது.

9) **தேசிய நீர்த் தொகுப்பு விருது (National Water Digest Award) : சர்வதேச காடுகள் தினமான (World Forest Day) மார்ச்** 21 அன்று வழங்கப்பட்ட இவ்விருதினை **சத்தீஸ்கர் மாநில அரசு** பெற்றுள்ளது. தண்ணீரைச் சேமித்தல், பிரித்தளித்தல் (Diversion) மற்றும் நீர்ப்பாசன அளவினை அதிகரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டதற்காக சத்தீஸ்கருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

10) இந்திய சொகுசு ரயிலான **'Place on Wheels' இந்த ஆண்டுக்கான சுற்றுலா செல்வதற்கான சிறந்த இரயில்** (Tourist Train of the year) என்னும் விருதினைப் பெற்றுள்ளது. இவ்விருது **பசிபிக் பகுதி பயணக் கட்டுரையாளர்கள் கூட்டமைப்பினால்** (Pacific Area Travel Writers Association) வழங்கப்பட்டது.

11) வியட்நாமின் 'குயேன் ஹூவாங் ஜியாங்' (Nguyen Huong Giang) என்னும் பெண்மணி **மிஸ் சர்வதேச மகாராணியாகத்** (Miss International Queen) தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவ்விழா தாய்லாந்து நாட்டில் நடைபெற்றது.

## *நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்*

1) இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டவர்கள் :

| வ.எண் | அதிபர்/அரசர் | நாடு | பெயர் |
|---|---|---|---|
| 1. | அதிபர் | பிரான்சு | இம்மானுவேல் மாக்ரோன் (Immanuel Macron) |
| 2. | அதிபர் | வியட்நாம் | டிரான் தய் குவாங் (Tran Dai Quang) |
| 3. | அரசர் | ஜோர்டான் | அப்துல்லா II பின் அல் ஹூசைன் (Abdullah II bin Al Hussein) |

2) இந்தியாவில் அண்மையில் நியமிக்கப்பட்ட மாநில முதலமைச்சர்கள் :

| வ.எண் | மாநிலம் | முதலமைச்சர் |
|---|---|---|
| 1. | திரிபுரா | பிப்லப் குமார் தேவ் (BJP) (Biplab Kumar Deb) |
| 2. | மேகாலயா | கான்ராட் சங்மா (தேசிய மக்கள் கட்சி) (Conard Sangma - National People's Party) |
| 3. | நாகாலாந்து | நெய்ஃபியூ ரியோ (தேசிய ஜனநாயக முற்போக்குக் கட்சி) (Neiphiu Rio - Nationalist Democratic Progressive Party) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

3) பல்வேறு நாடுகளில் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர்கள் :

| வ.எண் | நாடு | அதிபர் |
|---|---|---|
| 1. | சீனா | ➢ ஜி ஜின்பிங் (2வது முறை)<br>➢ வாங் கிஷான் (துணை அதிபர்) (Wang Qishan)<br>➢ லீ கெகியாங் (பிரதமர்) |
| 2. | ரஷ்யா | விளாடிமிர் புதின் (4வது முறை) |
| 3. | பெரு | மார்டின் விஸ்காரா (Martin Vizcarra) |
| 4. | எகிப்து | அப்துல் ஃபதா அல் சிசி (Abdul Fattah al-Sisi) |
| 5. | மியான்மர் | வின் மியின்ட் (Win Myint) |
| 6. | அர்மேனியா | அர்மேன் சர்கிசியான் (Armen Sarkisian) |

4) பீகார் மாநில ஆளுநர் சத்யபால் மாலிக் அவர்களுக்கு ஒடிசா மாநிலத்தின் ஆளுநர் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

5) மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் சுரேஷ் பிரபுவுக்கு வான்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சகப் பொறுப்பு கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது.

6) பொருளாதாரத் தொழில்நுட்பம் சார்ந்த பிரிவுகளில் ஒழுங்குமுறையை ஏற்படுத்தவும் முன்னேற்றத்தை உண்டாக்கவும் **சுபாஷ் சந்திர கார்க் குழு (Subash Chandra Garg Commitee)** நியமிக்கப்பட்டுள்ளது.

7) நேபாளத்தின் முதல் பெண் அதிபராகப் பதவி வகித்த **பித்யா தேவி பண்டாரி** (Bidya Devi Bandari) **மீண்டும் இரண்டாம் முறையாக அந்நாட்டின்** அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் நேபாள கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் ஆவார்.

8) **பாவனா காந்த் (Bhawana Kanth)** இந்திய வான்படையின் (IAF) போர் விமானத்தை (MIG-21 Bison) ஓட்டும் **இரண்டாவது இந்தியப் பெண் போர் விமானியாகத்** (2nd Indian Woman Pilot) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். **அவனி சதுர்வேதி** (Avani Chaturvedi) இந்தியாவின் **முதல் பெண் போர் விமானி** என்பது குறிப்பிடத்தக்கது.

9) இந்தோ-திபெத்திய எல்லைக் காவல் படையின் (Indo-Tibetan Border Police) போர்ப்படை அதிகாரியாகப் (Combat Officer) பதவியேற்கும் முதல் பெண் என்னும் பெருமையை **பிராகிருதி (Prakriti)** பெறுகிறார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

10) பத்திரிக்கைத் தகவல் அலுவலகத்தின் (Press Information Bureau) புதிய தலைவராக **சிதான்ஷீ ரஞ்சன் கார்** (Sitanshu Ranjan Kar) நியமிக்கப்பட்டுள்ளார்.

11) யுனெஸ்கோ செயற் குழுவின் (UNESCO Executive Board) இந்தியப் பிரதிநிதியாக **J.S.ராஜ்புத்** நியமிக்கப்பட்டுள்ளார்.

12) பாகிஸ்தான் நாடாளுமன்றத்தின் மேலவைக்கு (Upper House) தேர்ந்தெடுக்கப்படும் முதல் இந்துப் பெண்மணி என்னும் பெருமையை சிந்து மாகாணத்தின் **கிருஷ்ணகுமாரி கோலி** (Krishna Kumali Kohli) பெறுகிறார்.

13) **சந்திரகுமார் பூஷன்** இந்தியாவின் துணைத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார்.

14) மகாநதி நீர் விவகாரத் தீர்ப்பாயத்தின் (Mahanadi Water Disputest Tribunal) தலைவராக **நீதியரசர் அஜய் மணிக்ராவோ கன்வில்கார்** (Ajay Manikrao Khanwilkar) நியமிக்கப்பட்டுள்ளார்.

15) கருந்துளை (Black hole) பற்றிய கோட்பாடுகளை முன்வைத்தவரும் இங்கிலாந்தைச் சேர்ந்த இயற்பியலாளருமான **ஸ்டீபன் ஹாக்கின்ஸ்** (Stephen Hawking) 2018 மார்ச் 14 அன்று மறைந்தார்.

16) அமேசான் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியான **(CEO) ஜெஃப் பெசோஸ்** (Jeff Bezas) உலகின் மிகப் பெரிய பணக்காரராக உருவெடுத்துள்ளார்.

## புத்தகங்கள் & எழுத்தாளர்கள்

1) **'A Brief Histroy of Time'** என்னும் புத்தகத்தினை **ஸ்டீபன் ஹாக்கின்ஸ்** எழுதினார்.

2) **'The King of the Dark Chamber'** என்னும் நூலினை **ரவீந்திரநாத் தாகூர்** இயற்றினார்.

3) **'A Tribute to Jagu'** என்னும் புத்தகத்தினை முன்னாள் BCCI தலைவர் ஜக்மோகன் டால்மியாவின் நினைவாக **இலங்கை கிரிக்கெட் வாரியம்** வெளியிட்டுள்ளது.

## விளையாட்டு

1) **2020 டோக்கியோ கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளுக்கான சின்னங்களாக (Mascot)** **மிராய்டோவா (Miraitowa)** மற்றும் **சோமேட்டி (Someity)** ஆகியவற்றை ஜப்பானின் தொடக்கப் பள்ளி மாணவர்கள் தேர்வு செய்துள்ளனர்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ஒலிம்பிக் **(Miraitowa)** மற்றும் பாராலிம்பிக் (Someity) இரண்டுக்குமான சின்னங்களையும் தேர்வு செய்த மாணவர்கள் ஊதா நிறத்தை ஒலிம்பிக் போட்டிகளுக்கும் இளஞ்சிவப்பு (Pink) நிறத்தை பாராலிம்பிக் போட்டிகளுக்கும் தேர்வு செய்துள்ளனர்.

2) பெங்களூரில் நடைபெற்ற (இந்தியன் சூப்பர் லீக் (ISL) தொடரின்) இறுதி ஆட்டத்தில் சென்னை அணி (Chennayin FC) பெங்களூர் அணியை (Bengaluru FC) வீழ்த்தி, இரண்டாம் முறையாகப் பட்டம் வென்றது.

3) நேபாள கிரிக்கெட் அணி ஒரு நாள் போட்டிகளை ஆடுவதற்கான அந்தஸ்தினைப் (ODI Status) பெற்றுள்ளது.

4) ஆப்கானிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளரான **ரஷீத் கான் (Rashid Khan)** ஒரு நாள் போட்டியில் 100 விக்கெடுகளை வேகமாக வீழ்த்தியவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

5) **ஸ்மிரிதி மந்தனா (Smiriti Mandhana) :** பெண்கள் டி 20 போட்டிகளில் மிக வேகமாக அரைசதம் அடித்த (25 பந்துகளில் 50 ரன்கள்) வீராங்கனை என்னும் சாதனையை படைத்துள்ளார்.

6) **ஆசிய வில்வித்தைக் கோப்பை (Archery Asia Cup) :** பாங்காக்கில் நடைபெற்ற இப்போட்டியில் **முஸ்கன் கிரார் (Muskan Kirar)** மற்றும் **பிரமோளா தயமேரி** (Promla Diamary) ஆகியோர் தங்கம் வென்றனர்.

7) ஃபோர்பஸ் பத்திரிக்கை வெளியிட்ட 2018ம் ஆண்டுக்கான ஆசியாவின் 30 பிரபலங்களில் (Forbes 30, Asia 2018 list) **பி.வி.சிந்து மற்றும் ஸ்மிரிதி மந்தனா** ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

8) **ஆசிய மல்யுத்தப் போட்டிகள் 2018 : பிஷ்கெக், கிர்கிஸ்தான்**

| | | |
|---|---|---|
| அதிக பதக்கங்கள் பெற்ற நாடு | சீனா - 14 | தங்கம் - 7, வெள்ளி - 1, வெண்கலம் - 6 |
| இந்தியா வென்ற பதக்கங்களின் எண்ணிக்கை | 8 | (தங்கம் - 1, வெள்ளி - 1, வெண்கலம் - 6) |

| வ.எண் | பதக்கம் | இந்திய வீரர்கள் |
|---|---|---|
| 1. | தங்கம் | நவ்ஜோத் கவுர் - 65 Kg. (தங்கம் வெல்லும் முதல் இந்தியப் பெண் |
| 2. | வெள்ளி | வினேஷ் போகத் - 50 Kg |
| 3. | வெண்கலம் | சாக்ஷி மாலிக் - 62 Kg |

| | | |
|---|---|---|
| 4. | வெண்கலம் | ராஜேந்தர் குமார் - 55 Kg |
| 5. | வெண்கலம் | ஹர்பிரீத் சிங் - 82 Kg |
| 6. | வெண்கலம் | சங்கீதா போகத் - 59 Kg |
| 7. | வெண்கலம் | பஜ்ரங் பூனியா - 65 Kg |
| 8. | வெண்கலம் | ஓம் பிரகாஷ் வினோத் - 70 Kg |

9) **2018 ISSF உலகக் கோப்பை (Guadalajara, மெக்சிகோ) -** துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ஏர் பிஸ்டல் பிரிவு **(Air Pistol Shooting)**

| வ.எண் | பதக்கம் | வீரர் |
|---|---|---|
| 1. | தங்கம் | மனு பாக்கர் - 10 m (Manu Bhakar) |
| 2. | தங்கம் | ஷாசார் ரவி - 10 m (Shahzar Ravi) |
| 3. | தங்கம் | மனு பாக்கர் & ஓம் பிரகாஷ் மித்தர்வால் 10 m (கலப்பு) (Manu Bhakar & Om Prakash Mitarval) |
| 4. | தங்கம் | அகில் ஷெரோன் - 50 m, 3 position (Akhil Sheoram) |
| 5. | வெள்ளி | அன்ஜூம் மவுத்கில் - 50 m, position (Anjum Moudgil) |

10) **2018 ISSF ஜூனியர் உலகக் கோப்பை – (சிட்னி, ஆஸ்திரேலியா) – துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ஏர் பிஸ்டல் பிரிவு : (Air Pistol Shooting)**

| வ.எண் | பதக்கம் | வீரர்கள் |
|---|---|---|
| 1. | தங்கம் | மனு பாக்கர் - 10 m |
| 2. | தங்கம் | மனு பாக்கர் & அன்மோல் 10 m (கலப்பு) (Manu Bhakar & Anmal) |
| 3. | தங்கம் | அனிஷ் பன்வாலா (Anish Bhanwala) |
| 4. | தங்கம் | முஸ்கன் பன்வாலா - 25 m (Muskan Bhanwala) |

11) **சுல்தான் அஸ்லான் ஷா கோப்பை 2018 (ஹாக்கி) : மலேசியாவில்** நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்தை வீழ்த்தி **ஆஸ்திரேலியா** சாம்பியன் பட்டம் வென்றது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

12) **தியோதார் கோப்பை** 2018 **(Deodhar Tropy 2018 கிரிக்கெட்) :** கர்நாடக அணியைத் தோற்கடித்து **இந்தியா-B (India B) அணி** இக்கோப்பையை வென்றது.

13) துபாயில் நடைபெற்ற **உலக பாரா தடகள கிராண்ட் பிரிக்ஸ் (World Para Athletics Grand Prix 2018)** போட்டிகளில் **ஈட்டி எறிதல்** பிரிவில் **தீபா மாலிக் தங்கம்** வென்றார்.

14) **டென்னிசுக்கான இந்தியன் வெல்ஸ் போட்டியில்** (Indian Wells Title 2018 - Tennis) ரோஜர் பெடரரை வீழ்த்தி **ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோ** (Juan Martin del Potro) சாம்பியன் பட்டம் வென்றார்.

15) **ஐ-லீக் (I - League 2017-18)** கால்பந்து போட்டிகளில் **மினர்வா பஞ்சாப் அணி** கோப்பையை வென்றது.

16) **தோஹாவில் (Doha)** நடைபெற்ற **IBSF ஸ்னூக்கர் (Snooker) உலகக் கோப்பை** போட்டிகளில் பாகிஸ்தானை வீழ்த்தி **இந்திய அணி** சாம்பியன் பட்டம் வென்றது.

17) ரஷ்யாவின் மாஸ்கோவில் நடைபெற்ற **11வது தால் நினைவு செஸ் போட்டியின்** (Tal Memorial Chess) ரேபிட் பிரிவில் (Rapid Event) **விஸ்வநாதன் ஆனந்த்** சாம்பியன் பட்டம் வென்றார்.

18) ஆஸ்திரேலியாவின் கோல்ட் கோஸ்ட்டில் (Gold Coast) நடைபெறவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளின் (Common Wealth Games) தொடக்க விழா அணி வகுப்பில், இந்திய அணிவகுப்பின் போது இந்திய தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் வீரராக **P.V. சிந்து** தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

19) **வீரதீர விளையாட்டுகளுக்கான பள்ளியை (Academy of Adventure Sports)** கடப்பா மாவட்டத்தின் **காந்திகோட்டா கிராமத்தில்** (Gandikota Village) **ஆந்திரப் பிரதேச** அரசு அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

20) இந்தியாவின் **முதலாவது 'விளையாட்டு இலக்கிய விழா' (Sports Literature Festival)** எனப்படும் **Play Write 2018** என்னும் நிகழ்வினை **சண்டிகர்** நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## *முக்கியமான தினங்கள்*

| நாள் | நிகழ்வு | கருத்துரு/முக்கியத்துவம் |
|---|---|---|
| மார்ச் 1 | பாகுபாடு ஒழிப்பு தினம்<br>(Zero Discrimination Day) | சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்னும் கருத்தை வலியுறுத்துவதற்காக |
| மார்ச் 3 | உலக வன உயிர்கள் தினம்<br>(World Wildlife Day) | "அழிவின் விளிம்பில் பெரிய பூனைகள் - கொன்றுண்ணிகள்"<br>(Big Cats - Predators Under Threat) |

| | | |
|---|---|---|
| மார்ச் 4 | தேசிய பாதுகாப்பு தினம் (National Security Day) | பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வினை மக்களிடையே மேம்படுத்துவதற்காக |
| மார்ச் 8 | உலக மகளிர் தினம் | "Time is Now : Rural and Urban activists transforming women's lives". |
| மார்ச் 10 | Raising Day of CISF | மத்திய தொழிற் பாதுகாப்புப் படை (CISF) அமைப்பு ஏற்படுத்தப்பட்ட தினம் |
| மார்ச் 11 | தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) தொடங்கப்பட்டதன் 33வது ஆண்டு விழா | பல்வேறு வகைக் குற்றங்கள், விபத்துகள், தற்கொலைகள், சிறைச்சாலைகள் பற்றிய நம்பகமான தகவல்களைத் திரட்டி வைத்திருக்கவும் அரசின் கொள்கை முடிவுகளில் தெளிவான நிலைப்பாட்டை எடுக்கப்படுவதற்கான முகமையாக தேசிய குற்ற ஆவணக் காப்பகம் ஆனது திகழ்கின்றது. |
| மார்ச் 14 | பை தினம் 2018 (Pi Day 2018) | கணிதவியல் ஆர்வலர்கள், பை கண்டுபிடிப்பின் முக்கியத்துவத்தை அறிந்து அதனை போற்றும் விதமாகக் கொண்டாடப்படுகிறது. |
| மார்ச் 15 | சர்வதேச நுகர்வோர் உரிமைகள் தினம் (World Consumer Rights Day) | ("Making Digital Market Places Fairer") "டிஜிட்டல் சந்தைகளை நியாயமாக்குதல்" |
| மார்ச் 16 | உலக உறக்க தினம் (World Sleep Day) | "Join the sleep world, Preserve your Rhythms to Enjoy Life" |
| மார்ச் 20 | உலக சிட்டுக்குருவிகள் தினம் (World Sparrow Day) | "I Love Sparrows" |
| மார்ச் 20 | உலக மகிழ்ச்சி தினம் (International Day of Happiness) | "மகிழ்ச்சியினைப் பகிருங்கள்" ("Share Happiness") |
| மார்ச் 21 | உலக கவிதைகள் தினம் (World Poetry Day) | உலகெங்கும் உள்ள கவிஞர்களுக்கும் அவர்களின் கவிதைகளுக்கும் சிறப்பு சேர்க்கும் நோக்கத்தில் கொண்டாடப்படுகிறது. |
| மார்ச் 21 | சர்வதேச காடுகள் தினம் (World Poetry Day) | "காடுகள் மற்றும் நிலையான நகரங்கள்" "(Forests and Sustainable Cities)" |
| மார்ச் 22 | உலக தண்ணீர் தினம் (World Water Day) | "தண்ணீருக்காக இயற்கை" ("Nature for Water") |
| மார்ச் 23 | உலக காலநிலையியல் தினம் (World Meteorological Day) | "Weather - ready, Climate-Smart" |
| மார்ச் 23 | தியாகிகள் தினம்/ ஷாஹீத் திவாஸ் (Martyrs Day/Shaheed Diwas) | இந்திய விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த பகத் சிங், சுகதேவ் தப்பார் மற்றும் சிவராம் ராஜகுரு ஆகியோரின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் கடைபிடிக்கப்படுகின்றது. |
| மார்ச் 24 | சர்வதேச காசநோயாளிகள் தினம் (World Tuberclosis Day) | "Wanted : Leaders for a TB-Free World" |
| மார்ச் 24 | சர்வதேச சாதனையாளர் தினம் (International Day for Achievers) | பல்வேறு துறைகளிலும் திறமையுடன் சிறந்து விளங்கும் சாதனையாளர்களைக் கவுரவிக்கும் வகையில் இந்த தினம் கொண்டாடப்படுகிறது. |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS